[2nd November 1962

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒருமைப்பாடு என்பது அரசிய 10-00 a. m. லுக்கு அப்பாற்பட்டது என்று முன்பே தெரிவித்திருக்கிறேன். கனம் அங்கத்தினரைப் போன்றவர்களுக்குப் பிரிவினை அபிப் பிராயம் உண்டு என்றால், அத்தகையோருக்கு இதிலே இடமில்லை யென்றுதான் சொல்லவேண்டும்.

பீடிகள் (ஏற்றுமதி)

* **1120 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** *கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—*

பாகிஸ்தானிலிருந்து வாங்கும் பஞ்சுக்குப் பதிலாக இந்தியா விலிருந்து கொடுக்கும் நிலக்கரியோடு, தமிழ்நாட்டில் தயாராகும் பீடியையும் கொடுப்பதற்கான ஏற்பாடு செய்யும்படி மத்திய சர்க்காரை ராஜ்ய சர்க்கார் கேட்டுள்ளதா ? விவரமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

Soil Conservation Scheme

* **1121 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—**

(*a*) whether there is any proposal to revise the rates of Rs. 15 and Rs. 17 being paid per unit under the soil conservation scheme; and

(*b*) if so, when?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : *தர்மபுரி தொகுதியில் இம் மாதிரி யூனிட்டுக்கு 15 ரூபாய், 17 ரூபாய் என்று இருப்பது மிகக் குறைவாக இருக்கிறதென்றும் அதை உயர்த்தவேண்டுமென்றும் கோரிக்கை வந்துள்ளதா ? அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?*

கனம் திரு. பூ. கக்கன் : அந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்து பார்த்த பிறகு அதை உயர்த்த முடியாது என்று முடிவெடுக்கப்பட்டது.

சுதந்திரம் காக்கும் படை

* **1122 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** *கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—*

திராவிடநாடு வாரம் கொண்டாடும் திராவிட முன்னேற்றக் கழகத்தினரை தடுத்து நிறுத்த "சுதந்திரம் காக்கும் படை" ஒன்று சென்னையில் நிறுவப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆம். இந்த ஸ்தாபனத்தின் நடவடிக்கைகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்துள்ளன.